## தலைப்பு 251 - மதிப்பீட்டுத் திணைக்களம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மதிப்பீட்டுத் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 18 ஆந் திகதி பிரதான மதிப்பீட்டாளருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 செப்தெம்பர் 17 ஆந் திகதி பிரதான மதிப்பீட்டாளருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பீட்டுத் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காண்தல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாக காட்டுவதன் காரணமாக இடம்பெறுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்

பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் இணங்குகின்றன எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபார்சுகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன எனவும்,

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | ஆண்டின் போது ஏனைய பெறுவனவுகள் ரூபா 26,904,366 ஆக இருந்த போதிலும், அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 5,553,159 ஆகக் காட்டப்பட்டிருந்தமையின் காரணமாக ஏனைய பெறுவனவுகள் ரூபா 21,351,207 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | உரிய படிவம் தொடர்பான விபரம் ஆய்வு செய்யப்பட்டு வருவதுடன் 2021.12.31 இல் உள்ளவாறு கணக்குகளைத் தயாரிக்கும் போது குறைபாடுகளைக் குறைத்துக் கொள்வதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | அரசாங்க கணக்குகள் திணைக் களத்தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் வைப்புக்கள் பெறுதல் ரூபா 146,004,345 ஆக இருந்த போதிலும், அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 145,657,846 ஆகக் | 6000-0-0-13-0-158-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்க வேண்டிய ரூபா 346,499 பணம் 6000-0-0-020-0005-0 ஆம் இலக்க வைப்புக் கணக்கிற்கு | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 108,019,418 ஆக இருந்த போதிலும் அது நிதி செயலாற்றல் கூற்றில் ரூபா 107,672,919 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | செலவு வைக்கப்பட்டிருந்ததுடன் அது TR/2019/AC/156 ஆம் இலக்க மாற்றல் பத்திரத்தின் மூலம் தீர்த்து வைக்கப்பட்டுள்ளது. | |
| (இ) | ஏனைய திணைக்களங் களுக்காக திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 24,234,408 ஆக இருந்த போதிலும் அது ரூபா 11,177,682 ஆக கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் காட்டப்பட்டிருந்தது. | திணைக்களத்தின் சிகாஸ் பதிவுகளின் பிரகாரம் ஏனைய திணைக்களங்களுக்கான வரவு ரூபா 19,247,837.82 மற்றும் செலவு ரூபா 8,070,156.26 ஆகும். அதன் காரணமாகத் திணைக்களத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவு ரூபா 11,177,681.56 ஆகும். | - மேற்படி - |
| (ஈ) | தீர்த்து வைக்கப்பட வேண்டிய கட்டுநிதி செம்மையாக்கல் கணக்கில் பிழையாகச் செலவு வைக்கப்பட்ட ரூபா 46,981,387 தொகையான ஒரு ஆரம்ப மீதி காட்டப்பட்டிருந்தது. | உரிய கணக்கு தொடர்பாக ஆய்வு செய்யப்பட்டு வருகின்றது. 2021 திசெம்பர் 31 இல் கணக்குகளைத் தயாரிக்கும் போது குறைபாடுகளைக் குறைப்பதற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. | - மேற்படி - |

**1.6.2 நிதி நிலைமை தொடர்பான கூற்று**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி ஏடுகளின் பிரகாரம் நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 392,358,853 ஆக இருந்த போதிலும் நிதி நிலைமை கூற்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி ரூபா 396,409,239 ஆகக் காட்டியதன் | 2020 திசெம்பர் மாதம் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்குரிய நிலையான சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ததன் பின்னர் Web upload செய்து ஆண்டு இறுதி கணக்குப் பொழிப்புக்களை அரசாங்க | அரசாங்க கணக்குகள் திணைக்களத் தினால் வழங்கப்பட்ட 06 ஆம் இலக்க வழிகாட்டிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் |

| | | | |
|---|---|---|---|
| | காரணமாக நிதி நிலைமைக் கூற்றில் நிலையான சொத்துக்கள் ரூபா 4,050,376 மிகையாகக் காட்டப்பட்டிருந்தது. | கணக்குகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கை நாளதுவரையாக்கப் பட்டிருக்காததுடன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி அவ்வாறே திறைசேரி அச்சுப் பிரதிகளில் பதியப்பட்டிருந்தது. அந்த மீதிகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | வேண்டும். |
| (ஆ) | ரூபா 46,981,387 தொகையான தீர்த்து வைக்கப்படாத கட்டுநிதிக் கணக்கின் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ஒரு நிதிச் சொத்தாகவும் நடைமுறைப் பொறுப்பாகவும் காட்டப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு காட்டப்பட்டிருக்க வில்லை. | இழப்பீட்டு நீதவான் நீதிமன்றத்தின் பெறுவனவுகளாக ரூபா 48,981,387.00 பணம் 2021 மார்ச் 08 ஆந் திகதி திறைசேரி பிரதிச் செயலாளரின் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டது. | - மேற்படி - |

### 1.6.3 காசுப்பாய்ச்சல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு ரூபா 68,164,750 தொகை வருமானம் கிடைத்திருந்தும் காசுப்பாய்ச்சல் கூற்றில் அது ரூபா 56,802,482 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டில் திணைக்களத்திற்கு கிடைத்த ரூபா 68,164,750.00 தொகையான வருமானம் குறுக்குப் பதிவுகளுடன் பதியப்பட்டிருந்தது. | அரசாங்க கணக்கு கள் திணைக்களத் தினால் வழங்கப் பட்ட 06 ஆம் இலக்க வழி காட்டியின் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்றினை அண்ணளவான அடிப்படையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | திணைக்கள புத்தகங்களின் பிரகாரம் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 26,904,366 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 3,137,004 மற்றும் ரூபா 6,015,093 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | காசுப்பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவுகள் ரூபா 9,152,092 ஆக பொழிப்பு அறிக்கையில் பதியப்பட்டிருந்தும் அது ரூபா 3,137,004 ஆக இருத்தல் வேண்டும். | - மேற்படி - |
| (இ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மீண்டுவரும் செலவின் மொத்த தொகை ரூபா 429,163,822 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றில் மீண்டுவரும் செலவுகளாக ரூபா 427,627,465 தொகை காட்டப்பட்டதன் காரணமாக ரூபா 1,536,357 தொகையால் தேறிய காசுப் பாய்ச்சலில் ஒரு வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | மீளாய்வாண்டில் திணைக்கள ஏடுகளில் குறுக்குப் பதிவுகளுடன் பதிவு செய்யப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (ஈ) | திணைக்களத்தினால் ஏனைய திணைக்களங் களுக்காக ரூபா 24,234,408 தொகை செலவு செய்யப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில அப்பெறுமதி ரூபா 19,004,583 ஆக காட்டப்பட்டமையின் காரணமாக ரூபா 4,629,25 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட்டுள்ள பணம் ரூபா 664 ஆக இருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் திறைசேரிக்கு தீர்த்து வைக்கப்பட்ட பணம் ரூபா 1,761,792 ஆகக் காட்டியமையின் காரணமாக தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 1,761,128 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மூலதனச் செலவு ரூபா 214,433,370 ஆக இருந்தும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 211,816,514 ஆகக் காட்டப்பட்டமையின் காரணமாக தேறிய காசுப் பாய்ச்சலில் ரூபா 2,616,856 தொகையான வித்தியாசம் அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் முற்பணப் பெறுவனவுகள் ரூபா 27,407,625 ஆகவும் முற்பணங்கள் கொடுப்பனவுகள் ரூபா 24,128,018 ஆகவும் இருந்த போதிலும் அப்பெறுமதிகளை காசுப்பாய்ச்சல் கூற்றில் செம்மையாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஏ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் ஆண்டின் போது வைப்பு பெறுவனவுகள் ரூபா 146,004,345 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 7,700,352 ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 108,019,418 ஆக இருந்த போதிலும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 6,299,335 ஆகக் காட்டப்பட்டிருந்தது. | ரூபா 1,761,128 பணம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் மூலம் கிடைத்த தேர்தல் முற்பணங்களானதுடன் மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு அப்பணம் 2020 யூலை மாதத்திலேயே கிடைத்துள்துடன் அப்பணத்தை யூலை மாதத்தில் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான மதிப்பீட்டு வருமானத்தில் ரூபா 457,328,864 தொகை அல்லது 98 சதவீதம் 01 ஆண்டிலிருந்து 12 ஆண்டுகள் வரையான காலவீச்சில் நிலுவையாகக் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | பல ஆண்டுகளாக நிலுவையாகக் காணப்படும் வருமானத்தை அறவீடு செய்வதற்காக தாமதமின்றி நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது கடந்த ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 512,531,243 தொகையான நிலுவை வருமானத்தில் ரூபா 5,110,251 தொகை அல்லது 02 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது நிலுவையான மீதிகள் தொடர்பாக கைவிடுதல்களின் முழு மொத்தம் ரூபா 50,092,129 என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிலுவையாகவுள்ள வருமானத்தை கைவிடுவதற்கு முன்னர் அறவீடு செய்வதற்காக உச்ச அளவு முயற்சி எடுத்தல் வேண்டும். |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிலுவை வருமான அறிக்கையின் பிரகாரம் நீண்டகாலமாக அதிக அளவான வருமானம் நிலுவையாகக் காணப்பட்ட நிறுவனமாக நகர | - மேற்படி - | இந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி நிலுவை வருமானங்களை தாமதமின்றி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி அதிகார சபை, இலங்கை காணி மீட்பு மற்றும் அபிவிருத்தி கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய சேமிப்பு வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து ரூபா 185,877,099 மொத்த தொகை அறவிட வேண்டிக் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அந்த நிலுவைக் கால வீச்சு 2008 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையிலானதாகும். | | எடுத்தல் அவசியமானதாகும். |
| (உ) | மத்திய கொழும்பு மாகாண மதிப்பீட்டு அலுவலகத்தின் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட வருமானம் ரூபா 268,108,023 ஆக இருந்ததுடன் அது மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட மொத்த நிலுவை வருமானத்தில் 58 சதவீதம் என்பது அவதானிக்கப்பட்டது. | - மேற்படி - | நிலுவை வருமானங்களைத் தாமதமின்றி அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்தல் அவசியமானதாகும். |

**2.2 வருமான முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது 08 மீண்டுவரும் செலவு விடயங்களுக்காகவும் 04 மூலதன செலவு விடயங்களுக்காகவும் ரூபா 33.4 மில்லியன் மற்றும் ரூபா 20.44 மில்லியன் மிகை நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததன் காரணமாக நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் முறையே ரூபா 10.96 மில்லியன் மற்றும் ரூபா 4.7 மில்லியன் நிதி ஏற்பாடு | கொவிட் 19 நோய் பரவலின் காரணமாக 2020 மார்ச் மாதத்திலிருந்து ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டு நாடு மூடப்பட்டிருந்ததன் காரணமாக திட்டமிட்டவாறு செலவு செய்ய முடியாதிருந்தது. | வருடாந்த மதிப்பீட்டினை முடியுமான அளவில் சரியாகவும் நடைமுறைச் சாத்திய மானதாகவும் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிக்கப்பட்டிருந்தது. அச்சேமிப்பானது வழங்கப்பட்ட தேறிய நிதி ஏற்பாட்டில் 11 சதவீதத்திலிருந்து 100 சதவீதம் வரையான வீச்சுடையதாக இருந்தது. | | |
| (ஆ) | 251-01-01-1102 ஆம் இலக்க மற்றும் 251-01-01-2106 ஆம் இலக்க செலவு விடயங்களுக்காக அதாவது வெளிநாட்டு போக்குவரத்துச் செலவுகள் மற்றும் மென்பொருள் அபிவிருத்திகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 1,500,000 மற்றும் ரூபா 500,000 நிதி ஏற்பாடுகள் முழுமையாக (100%) சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 நோய் பரவலின் காரணமாக 2020 மார்ச் மாதத்திலிருந்து ஊரடங்குச் சட்டம் விதிக்கப்பட்டு நாடு மூடப்பட்டிருந்ததன் காரணமாக திட்டமிடப்பட்டவாறு செலவு செய்ய முடியாதிருந்தது. | - மேற்படி - |

## 2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்றுக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | திணைக்கள ஏடுகளின் பிரகாரம் மற்றும் திறைசேரி கணனி அச்சுப் பிரதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய மீதி ரூபா 91,234,063.83 ஆக இருந்த போதிலும் தனித்தனி மீதிகளை வகைப்படுத்தல் பொழிப்பின் பிரகாரம் அறவிட வேண்டிய மீதி ரூபா 91,165,205.83 ஆகும். அதற்கிணங்க ரூபா 71,024 வித்தியாசம் அவதானிக்கப்பட்டதுடன் அவற்றினை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | அரசாங்க நிதித் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 01 ஆம் இலக்க வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) ஓய்வுபெற்று மூன்று மாதங்கள் மற்றும் மூன்று ஆண்டுகள் காலமாக 10 உத்தியோகத்தர்களிட மிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,516,797 மொத்த தொகையான கடன் மீதியை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளிலிருந்து 08 ஆண்டுகள் வரையான கால வீச்சுடைய ரூபா 308,614 கூட்டுமொத்தமான 03 கடன் மீதிகள் அறவிடப்படாது காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) சேவையை விட்டுச் சென்றுள்ள உத்தியோகத்தர் களிடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலத்தைக் கொண்ட ரூபா 85,810 கூட்டுமொத்தமான 05 நிலுவைக் கடன் மீதிகள் அறவீடு செய்யப்படாது காணப்பட்டன. | - மேற்படி - | - மேற்படி - |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கடமைகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்பாடுகள் நிறைவேற்றப்படாத 9,528 பொதுக் கோவைகளும் வீதவரி தொடர்பான 3,182 கோவைகளும் எஞ்சியிருந்தன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | திட்டமிட்டவாறு செயற்பாடுகளை நிறைவேற்றல் அவசியமானதாகும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரித்த பதவியணியில் 49 சதவீதம் அதாவது 540 வெற்றிடங்கள் காணப்பட்டன. | கருத்துரைகள் வழங்கப்படவில்லை. | இப்பதவி வெற்றிடங்கள் காணப்படுகின்றமை திணைக்களத்தின் செயலாற்றலுக்கு பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள தாயின் அவ் வெற்றிடங்களை விரைவாக நிரப்புவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |